# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 6, 2021 Weekly E-paper • March 6, 2021



# பளிச்செனப் புலப்படும் பாஜக அரசியல்!

-சுப. வீரபாண்டியன்

## பிற்போக்குத்தனமான அதிமுக ஆட்சி

மா.சு. நேர்காணல்

## நீதி கிடைக்குமா?

தலையங்கம்

## வெற்றியைத் தீர்மானிக்கப் போகும் பெண்கள்!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • மார்ச் 6, 2021 Weekly E-paper • March 6, 2021


# பளிச்செனப் புலப்படும் பாஜக அரசியல்!

**-சுப. வீரபாண்டியன்**

இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை - சசிகலா சிறை விட்டு வெளிவந்து! அதற்குள் பாவம் அரசியல் துறவி ஆகிவிட்டார் - இல்லை - ஆக்கப்பட்டுவிட்டார்! 'தீவிர அரசியலில் இறங்குவேன்' என்று சென்ற வாரம் முழக்கமிட்டவர், இன்று அரசியலை விட்டே ஒதுங்குகிறேன் என்கிறார். அதிமுக பொதுச் செயலாளர் என்று எழுதிக் கையொப்பமிட்டவர், இன்று வெற்றுத்தாளில் வெறுமனே 'வி.கே. சசிகலா' என்று மட்டுமே ஒடுங்கிப் போகிறார்.

அவர் சிறை விட்டு வரும்போதுதான் எவ்வளவு ஆர்ப்பாட்டம்! வருகின்ற வழியெல்லாம் வாக்கு வங்கியின் வலிமை காட்டப்பட்டது. வீட்டிற்கு வந்தபிறகும், எதிர்பாராத விருந்தினர்கள் அவரை வந்து சந்தித்தனர். இயக்குனர் இமயமே கொஞ்சம் குனிந்து வந்து பார்த்துவிட்டுப் போனது. மண்டியிடாத மானத்திற்குச் சொந்தக்காரர், அன்று ஒருநாள் மட்டும் மண்டியிடலாம் என்று பொதுக்குழுவைக் கூட்டி முடிவெடுத்தார். நன்றி மறக்காத ஒருவர் நான்கு வருடங்களுக்குப் பிறகு நன்றியுணர்ச்சி சட்டென்று மேலிட, தன் மனைவியோடு வந்து தியாகத் தலைவியைச் சந்தித்தார். எல்லோரையும் தூக்கி அடிப்பது போல், ஊழலை ஒழிப்பதற்காகவே அவதாரம் எடுத்தவர், 'ட்ராபிக்' கையே சற்று நேரம் நிறுத்திவிட்டு, சசிகலாவை வந்து பார்த்து, அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று சான்றிதழ் வழங்கினார். இவ்வளவும் நடந்தபோதெல்லாம் அமைதியாக இருந்த சசிகலா ஏன் திடீரென்று இப்படி ஒரு முடிவெடுத்தார்?



எந்த போதி மரத்தடியில் ஞானம் பெற்றுப் புத்தராய் மாறினார் அவர்? தில்லியில் தயாரிக்கப்பட்ட மரமாகத்தான் அது இருக்க முடியும். வேறு எந்த மரத்திற்கு அவ்வளவு வலிமை வந்து சேரும்?

இவையெல்லாம் வெறும் யூகங்கள் இல்லை. அரசியலை விட்டு ஒதுங்குவதாய்ச் சொல்லும் அந்த அறிக்கை,'திமுக வை ஆட்சியில் அமர்த்தி விடக்கூடாது' என்னும் வேண்டுகோளுடன் சேர்ந்தே வருகிறது என்றால், இது அரசியல் இல்லாமல் வேறு என்ன?

சரி, அரசியலை விட்டு ஒதுங்குவதற்கும், திமுக எதிர்நிலைக்கும் என்ன தொடர்பு? சசிகலா கட்சி தனித்துப் போட்டியிட்டால், திமுக எதிர்ப்பு வாக்குகள் பிரியும். அப்படியானால், சசிகலாவையும், எடப்பாடியையும் சேர்த்து வைத்து விடலாமே? தில்லியின் மிரட்டலுக்கு இங்குள்ள இரட்டையர்கள் பணியாமலா இருப்பார்கள்? இவர்கள்தான், அமித்ஷா அங்கு வரும்போதே, இங்கு குனிய ஆரம்பித்து விடுகின்றனரே! பிறகென்ன, இருவரையும் அல்லது இரண்டு கட்சிகளையும் சேர்த்து விட்டால், வாக்குகள் பிரியாதே என்றுதான் நாம் நினைப்போம். ஆனால் அதற்குள் இன்னொரு கணக்கு இருக்கிறது. ஊழலையும், ஊழலையும் ஒன்று சேர்த்தால் அது மகா ஊழல் கூட்டணி என்று ஆகிவிடாதா? அதிமுக வின் ஊழலாவது இன்றுவரையில் விசாரிக்கப்படாத ஊழல். சசிகலாவின் ஊழலோ, தண்டிக்கப்பட்ட ஊழல். எனவே சேர்த்தாலும் சிக்கல், பிரித்தாலும் சிக்கல்.

ஆகவேதான் புதுவழி ஒன்றைக் கண்டுபிடித்தது பாஜக. அரசியலை விட்டு விலகிக்கொண்டால், சொத்துகளைக் காப்பாற்றிக் கொண்டு, அமைதியாகவாவது வாழலாம். இல்லையென்றால் எல்லாச் சொத்தும் பறிபோய்விடும் என்னும் ஒரே ஒரு மிரட்டல் போதாதா?

பளிச்செனப் புலப்படும் இந்தப் பாஜக வின் அரசியல்தான், சசிகலாவின் திடீர்க் கடிதம். பாஜக வின் தந்திரம் பலித்துவிட்டது.

அரசியலில் தந்திரங்கள் கைதட்டும். ஆனாலும், உண்மைதான் இறுதியில் முரசு கொட்டும்! .

# பிற்போக்குத்தனமான அதிமுக ஆட்சி

## சைதை சட்டமன்ற உறுப்பினர் மா.சுப்ரமணியன், நேர்காணல்

**உதயகுமார்: 2016 முதல் 2021 வரை 5 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக தாங்கள் ஆற்றிய பணியில் குறிப்பிடத்தக்கனவாகக் கருதுபவை.**

**மா.சுப்ரமணியன்:** 2017 ஜூலை 1ஆம் தேதி பசுமை சைதைத் திட்டம் என்கிற திட்டத்தை தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொகுதியில் உள்ளவர்களின் பிறந்தநாளன்று அவர்கள் வீட்டு வாசலில் மரக்கன்று நடும் திட்டம். அது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு இதுவரை சைதைப் பகுதியில் மட்டும் 40,000 மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. பிரபல திரைப்பட நடிகர்கள், இயக்குனர்கள் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டிருக்கிறார்கள். அதேபோல் கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் 50 ஆயிரம் தென்னை மற்றும் மாமரங்கள் நடப்பட்டிருக்கின்றன. இதுவரை மொத்தம் 90 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து செய்து வருகிறோம். இது ஒரு மிக முக்கியமான மகிழ்ச்சியான செயல்பாடாக இருக்கிறது.

"கலைஞர் கணினி கல்வி மையம்" தொடங்கப்பட்டு சைதைத் தொகுதியில் இருக்கும் ஏழை மாணவர்களுக்குக் கணினிக் கல்வி, Tally போன்றவை கற்றுக் கொடுக்கப்பட்டு, பயிற்சி முடிந்ததும் வேலைவாய்ப்பும் கொடுக்கப்பட்டது. இதுவரை 253 மாணவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்து என்.ராம் அவர்களைக் கொண்டு அந்த 253 மாணவர்களுக்கும் பணி அளிப்பும் பட்டமளிப்பும் கடந்த வாரம் விழாவாக நடத்தப்பட்டது. ஏழை மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியின் மூலம் பெரிய நிறுவனங்களில் பணி கிடைத்தது பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது.

அதேபோல் மூன்று பெரிய மருத்துவ வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திப் பலருக்கும் வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுத்திருக்கிறோம். மாநகராட்சி செய்யத் தவறிய, மழைக்காலத்தின் போது சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஐந்து ஆண்டுகளில் 150 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன.

ஒரு நூற்றாண்டுக் காலப் பழைமைவாய்ந்த சைதாப்பேட்டை அரசு பொது



மருத்துவமனைக்கு எக்ஸ்ரே உள்ளிட்ட உபகரணங்கள், ஜெனரேட்டர் வசதிகள் போன்றவை 75 லட்சம் ரூபாய் செலவில் செய்து தரப்பட்டிருக்கின்றன. சைதை தொகுதியில் மட்டும் 148 மழைநீர் சேகரிப்பு மையங்களை நாங்கள் தொடங்கினோம். அதன்பிறகுதான் மாநகராட்சி தொடங்குவதாக அறிவித்தது. அறிவித்தது அறிவித்தபடி இருக்கிறது.

2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது தொகுதி முழுவதும் நடந்தே சென்று மக்களிடம் வாக்குகள் கேட்டேன். அதேபோல இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்தே சென்று மக்களிடம் குறைகளைக் கேட்டேன். ஒரு நாளைக்கு 5 மணி நேரம் என தொடர்ந்து 14 நாள்கள், 70 மணி நேரம் நடந்து சென்று மக்கள் குறைகளைக் கேட்டு அவர்களிடம் மனுக்களைப் பெற்றேன். பெறப்பட்ட மனுக்களை துறை வாரியாகப் பிரித்து துறை சார்ந்த உயர் அலுவலர்கள், செயலாளர்களிடம் கொடுத்து அதன் மீதான நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினேன். யார் எப்போது தொலைபேசி, இந்த இடத்தில் இந்தப் பிரச்சனை என்று சொன்னாலும், உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன்.

**உதயகுமார்: அதிமுகவின் ஆட்சி அதிலும் குறிப்பாக ஜெயலலிதாவின் ஆட்சி பொற்கால ஆட்சி என்று சொல்லப்படுவது பற்றி உங்களுடைய கருத்து:**

**மா.சுப்ரமணியன்:** ஜெயலலிதா ஆட்சி எடப்பாடியுடைய ஆட்சி எல்லாம் ஒன்றுதான். இந்த இரண்டு ஆட்சிகளும் இருப்பதிலேயே மிக மோசமான பிற்போக்குத்தனமானப் போக்கை உடைய ஆட்சிகள்தான். அது மட்டுமல்ல எந்த விதமான சீரிய திட்டங்களும் சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அதிகாரிகள் எழுதிக்கொடுத்துப் படிப்பது மட்டுமே நிதிநிலை அறிக்கை ஆகும்.

அடையாறு ஆற்றை அகலப்படுத்தி வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டக் கோரிப் போராட்டம் நடத்தி பல முயற்சிகளுக்குப் பின்னர் கட்டத் தொடங்கினார்கள் அடையாறு ஆற்றில் கழிவு கலந்த மண்ணைக் கொண்டே கட்டத் தொடங்கினார்கள். இரசாயனம் கலந்த தண்ணீர் எடுத்து கட்டத் துவங்கினார்கள். இந்த மணலாலும் தண்ணீராலும் கட்டத் தொடங்கிய தடுப்புச்சுவர் தொட்டஉடனேயே அரித்துக் கொண்டு வந்துவிடுகிறது. இதை நேரடியாக ஆய்வு செய்து நடைபெற்று வரும் முறைகேடுகளைப் பற்றியும் ஊழலைப் பற்றியும், சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறைச் செயலாளரிடம் மனுக்கொடுத்திருக்கிறோம்.

**உதயகுமார்: திமுகவின் தொண்டராக சட்டமன்ற உறுப்பினராக மேயராக நெடிய அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். திமுக அதிமுக இரண்டு கட்சிகளின் தலைமையும், அதன் தொண்டர்களை நடத்துவதில் என்ன வேறுபாடு இருப்பதாக உணருகிறீர்கள்?**

**மா.சுப்ரமணியன்:** திமுகவில் உழைப்பவர்களுக்கு மரியாதை. அதற்கு நானே உதாரணம். எந்தவிதமான குடும்பப் பின்னணியும் இல்லை, ஜாதிப் பின்னணியும் இல்லை, பொருளாதார வசதியும் இல்லை. அப்படியிருந்த நானே சட்டமன்ற உறுப்பினராகவும் மேயராகவும் இருந்ததற்குக் காரணம் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கப்பட்டதுதான்.

தொண்டர்கள் சமமாக நடத்தப்படுகிறார்கள். சுயமரியாதை உணர்வோடு எல்லோருமே அணுகப்படுகிறார்கள். ஆனால் அதிமுகவில் எதுவும் இருக்காது. முதலமைச்சராக அறிவிக்கப்பட்டவுடன் எடப்பாடி எப்படி விழுந்து கும்பிட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்குப் பிறகு தன்னை யாரும் தேர்ந்தெடுக்கவில்லை என்றும், தானாகவே வந்தேன் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார். எடப்பாடி மட்டுமல்ல எல்லா அதிமுகவினரும் அப்படியேதான் இருப்பார்கள். ●

வாக்களிப்போம் உதயசூரியன்

## தளபதி பிறந்த நாள்



1-3-2021 அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தளபதி அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நேரில் வாழ்த்துச் சொல்லி மகிழ்ந்த நேரம்.

## தளபதி பிறந்த நாள் விழா




திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, பிரச்சாரக் குழு சார்பாக 2-3-2021 செவ்வாய்க்கிழமை அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற தளபதி அவர்களின் பிறந்தாநாள் விழா மேடையில் தி.மு.க. மாநில மகளிர் அணிச்செயலாளர் கனிமொழி, தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், ஹெலன் டேவிட்சன், கவிஞர் சல்மா, விஜயா தாயன்பன் உள்ளிட்டோர்

## அண்ணா, கலைஞர் நினைவிடம்



22-2-2021 ஆம் நாள் சென்னை கடற்கரை அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் நினைவிடத்தில் பேராசிரியர் சுபவீ அவர்களுடன் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## நீதி கிடைக்குமா?

தொடர் பாலியல் வன்கொடுமைகள் நடைபெறும் மாநிலம் உத்தரப்பிரதேசம் என்பதை சமூக ஊடகங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து கொண்டிருக்கின்றன.

அந்த வரிசையில் தமிழ்நாடும் வந்துவிடுமோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்படுகிறது. அதற்கு பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை நிகழ்வே ஒரு சான்று.

பொள்ளாச்சியில் நடந்த அந்த பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. முக்கியக் குற்றவாளிகள் இன்னமும் வெளியே நடமாடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதில் ஆளும் தரப்புக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதால், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இதில் அக்கறை எடுக்கவில்லை போலத்தெரிகிறது.

இப்பொழுது காவல்துறையின் சிறப்பு டி.ஜி.பி. ராஜேஷ் மீது அதே துறையைச் சேர்ந்த பெண் கண்காணிப்பாளர் ஒருவர் தன்னைப் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கியதாகப் புகார் அளித்துள்ளார்.

இதையடுத்துச் செங்கல்பட்டு மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் கண்ணன் பாதிக்கப்பட்ட பெண் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரைத் திரும்பப் பெறச்சொல்லி வற்புறுத்தியிருக்கிறார்.

இன்று கிடைத்துள்ள செய்தியின்படி அவருக்கு கொலை மிரட்டலும் வந்துள்ளது.

காவல்துறையின் சிறப்பு டி.ஜி.பி. ராஜேஷ் மீது பாலியல் குற்றச்சாட்டுக் கொடுக்கப்பட்டவுடன் அவரைப் பதவி இடைநீக்கம் செய்து வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும்,

மாறாக அவரைக் காத்திருப்போர் பட்டியலில் வைத்திருப்பது என்பது ஏறத்தாழ அவர் பதவியில் இருப்பதற்குச் சமமாகும். இந்தக் கண்துடைப்பு நாடகத்தால் நீதி கிடைக்குமா என்ற கேள்வி எழுகிறது.

திமுக தலைவர் ஸ்டாலின் சொல்வதைப் போல சிறப்பு டி.ஜி.பி. ராஜேசையும், செங்கல்பட்டு கண்காணிப்பாளரையும் கைது செய்து வழக்கை நேர்மையாக நடத்த வேண்டும்.

இப்பொழுது தேர்தல் நடத்தை விதி இருப்பதனால் உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதே மக்கள் எதிர்பார்ப்பு.

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# வெற்றியைத் தீர்மானிக்கப் போகும் பெண்கள்!

சாரதாதேவி

2021 தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டுவிட்டது. மகளிர் நாளும் நெருங்கிவிட்டது. மகளிர் இந்தத் தேர்தலில் ஆற்றப்போகும் அறம் சார்ந்த பங்கை சிறிது அலசுவோம்.



இந்தத் தேர்தல் மகளிருக்கு எவ்வளவு முக்கியமானது, அதை எவ்வாறு அவர்கள் அணுகப் போகிறார்கள் என்பதும் தேர்தலின் முக்கியத்துவத்தை மட்டுமல்ல சனநாயகத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தப் போகிறது.

என்றுமே பெண்கள் கருணையானவர்கள் மட்டுமல்ல, உண்மை விரும்பிகளும், துணிவு விரும்பிகளும், சமத்துவத்துக்கான மாற்றத்தை உடனடியாக உள்வாங்கிக்கொள்பவர்களும் ஆவர். மொத்தத்தில் அவர்கள் அறம் சார்ந்தவர்கள்.

### பெண் என்பதால் ஜெயாவின் மீது பெண்கள் காட்டிய கருணை

எம்.ஜி.ஆரின் இறப்பில் தனித்து விடப்பட்ட ஜெயலலிதாவை, என்றுமே தனி மரமாக நின்றுவிட்ட ஜெயலலிதாவை, வாரிசற்ற ஜெயலலிதாவை இறப்பு வரை கொண்டாடியவர்கள் பெண்கள். ஆம்! அப்படித்தான் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மீது அவர்கள் கருணை கொண்டார்கள். மோடியா லேடியா? நான் இருக்கும்போது உள்ளே நுழைவியா என்ற நேர்மையை, துணிவை அவர்கள் கொண்டாடினார்கள். ஆம்! ஏழைகளுக்காக கலைஞர் கொண்டுவரும் திட்டங்களை, பெயர் மாற்றினாலும், கூடுதல் தொகையுடன் செய்வார். பெண்கள் இதையெல்லாம் அறம் சார்ந்தே ஆதரித்தனர்.

அவர்களுக்குத் தேவையானது நடக்கும் வரை, அவர்கள் ஜெயலலிதாவின் திருட்டைக் கூட தண்டித்தும் மன்னித்தும் கடந்தனர்.

### இன்றைய அடிமை அரசு

ஆனால், இன்றோ நிலைமை வேறு! 2015 சென்னை வெள்ளத்தின் போதே முடியாமல் இருந்தவர், 2016ல் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து தப்பவே மீண்டும் ஆட்சிக்கு வரவைக்கப்பட்டார். கடந்த 4 ஆண்டுகளில் தமிழக மக்கள் சந்திக்கும் அவலம் சொல்லி மாளாதது!

- பெண்களுக்கு இருசக்கர வண்டி என்றார்கள். வந்த பாடில்லை!
- வேலைவாய்ப்பு லட்சக்கணக்கான இளைஞர்கள் ஆண்டுதோறும் பதியும் நிலையில் சில ஆயிரங்களில் கிடைக்கிறது!
- நீட் தேர்வுக்கு அனுமதி அளித்ததனால் அனிதா முதல் ஆதித்யா வரை 15க்கு மேற்பட்ட அறிவார்ந்த பிள்ளைகளை இழந்திருக்கிறோம்.
- நீட் கோச்சிங் என்ற பெயரால் சாதாரண நடுத்தர வர்க்க மக்களும் சில லட்சங்களை செலவு செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள்.
- அண்ணா பல்கலையில் நடக்கும் நாடகங்கள், நம் மாணவர்களின் பொறியாளர் கனவுகளையும் சிதறடிப்பதைப் பெண்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.
- கடன் வாங்கி கடன் வாங்கி அரசுக் கருவூலத்துக்கு அனுப்பாமல் தங்கள் சொந்தக் கருவூலங்களை நிரப்புவதைப் பெண்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.
- பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் தலையிலும் ரூ.60,000/- கடன் இருக்கிறது என்று தி.மு.க தலைவர் ஸ்டாலின் சொல்லும்போது பெண்கள் சுயபச்சாதாபம் கொள்ளவில்லை. மாறாக மாற்றத்தை விதைக்கத் தயாராகி விட்டார்கள்.
- நிதி ஒதுக்காமல் விதி 110ன் கீழ் செய்யும் அறிவிப்புகளை இனியும் அவர்கள் நம்பத் தயாராக இல்லை.
- கொரோனா பெருந்தொற்றால் வாழ்வாதாரங்களை இழந்தும், வருமானம் குன்றியும் போன சூழல் ஒருபுறம்!
- பெட்ரோல், டீசல், விலை உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வால் கூடிய குடும்பச் செலவுகள் மறுபுறம்!
- இந்தப் பாதிப்புகளின் நேரடித் தாக்கத்தைப் பெண்களே அதிகம் உணருகிறார்கள். வயிற்றுக்குச் சோறிடும் பொறுப்பு பல பெண்களிடம் தானே இன்னமும் உள்ளது!

### கூட்டம் கூட்டமாகப் பெண்கள்

திரு.ஸ்டாலின் அவர்களைப் பெண்கள் மிகவும் நேசித்தே வந்திருக்கிறார்கள். அவர் சென்னை மேயராக இருந்தபோது கொண்டுவந்த திட்டங்களால் இன்று இலகுவான வாழ்க்கை வாழும் சென்னைவாசிகள், அவர் உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராகவும், துணை முதல்வராகவும் இருந்த போது புகார்களுக்கு இடமின்றி நிறைவேற்றிய திட்டங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்கள் ஆவர்.

இன்றைய கிராம சபைக் கூட்டங்களில் கூடும் பெண்கள் திரு.ஸ்டாலின் அவர்களை ஆரத்தி எடுத்து வெற்றித் திலகமிடக் கூடும் பெண்கள்!

ஸ்டாலின் மட்டுமல்ல! திரு. கனிமொழி அவர்கள் மேற்கொள்ளும் சூறாவளிப் பயணங்கள், ஆணவக் கொலைகளாலும், சாதிய வன்கொடுமைகளாலும், பாகுபாடுகளாலும் அல்லலுறும் மக்கள் மீதும் ஆணாதிக்கச் சமூகத்தால் பாதிக்கப்படும் பெண்கள் மீதும் அவர் காட்டும் பரிவும், அவர் கொடுக்கும் நம்பிக்கையும் எல்லாத் தரப்பினரையும், குறிப்பாக நடுநிலையாளர்களையும், பெண்களையும் கவர்ந்து வருகின்றன.

தி.மு.கவின் அறிவு முகம், அசத்தல் முகம் திரு.திருச்சி சிவா, திரு.ஆ.ராசா - அவர்கள் ஆடும் அடித்தாட்டம் பெண்களைக் கவனிக்க வைக்கிறது. திரு.உதயநிதி திரட்டும் இளைஞர் பட்டாளமும் பெண்கள் பெருந்திரளும், அவருடைய ஆடம்பரமற்ற எளிய பேச்சுகளும் கவராத பெண்களே இல்லை எனலாம். நம்ம வீட்டுப் பிள்ளையாக, வளரும் கன்றாக அவரைக் கவனிக்கத் தொடங்கி உள்ளனர் பெண்கள்!

கருணையும், அன்பும், உண்மையும், சமத்துவமும் விரும்பும் அறம் சார்ந்த எம் பெண்கள் வரும் தேர்தலில் பெண்களின் வலிமையை, அறத்தின் வழியில் நின்று நிரூபிப்பார்கள்! கலைஞரின் ஆட்சியைக் கொண்டுவருவார்கள்!

வாக்களிப்போம் உதயசூரியன்

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,